**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT**
**CHENGALPATTU**

## MCOP No. 47/2024

| | |
|---|---|
| Ranking of Witness | PW.2 |
| Name | திரு.ஹரிஷ்குமார் |
| Father's Name/Husband Name | திரு.ஏழுமலை |
| Age | 23 |
| Address | வெங்கூர் கிராமம் , திருப்போரூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.11.2025.

**முதல் விசாரணை –**

நான் இந்த மனுவின் 3வது நபர். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் உண்மை என்று உறுதி கூறுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** –

நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வந்ததா? என்றால் இல்லை. இன்றைய தேதியில் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று மனுதாரரின் மாமா சரவணன் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள வழக்கு எண் உள்ளிட்ட விவரங்கள் மனுதாரரின் வழக்கறிஞர் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். இரண்டு வாகனங்களும் எதிரெதிராக நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டது. விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான் புகார்

S. Harishkumar
04/11/2025.

அளிக்கவில்லை. போலிசாரும் விபத்து சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை. விபத்தானது 25.9.2020 அன்று நடைபெற்றது. சத்தம் கேட்டு 15 நிமிடங்கள் கழித்து சென்று பார்த்தேன். நான் பார்க்கும் போது மினி டேங்கர் லாரியும் திருமுகத்தின் பல்சர் இருசக்கர வாகனமும் மோதியிருந்தது. நான் போகும் போது கூட்டம் கூடிவிட்டது. அங்கிருந்தவர்களில் யார் புகார் அளித்தார்கள் என்று எனக்குத் தெரியாது. நான் போகும் போது மனுதாரர் அடிபட்டு சாலையில் இருந்தார். டேங்கர் லாரியில் இருசக்கர வாகனம் முன் மத்திய பகுதி, இடது பகுதி, அல்லது வலது பகுதி ஆகிய இடத்தில் எந்த பகுதியில் இடித்தது என்று எனக்குத் தெரியாது. அந்த லாரிக்கு எத்தனை சக்கரம் இருந்தது என்று எனக்குத் தெரியாது. அந்த லாரி அங்கு நின்று கொண்டிருந்தது. அங்கிருந்த நபர்கள் பக்கத்து ஊரைச் சேர்ந்தவர் என்று சொல்லி சரவணன் அலைபேசி எண்ணை எனக்குக் கொடுத்தார்கள். நான் அவருக்கு போன் செய்தேன். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும், மனுதாரர் மற்றும் அவரது உறவினர் என்னிடம் கேட்டுக் கொண்டதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S. Harish Kumar
04/11/2025

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்துப்பார்த்து சரி என்று ஒப்புக் கொண்டு 04.11.2025 அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

தலைமை குற்றவியல் நடுவர்,
செங்கல்பட்டு.